**செ.வெ.எண்.68** **நாள் 24.08..2021**

**அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் காலியாக உள்ள தொழிற் பிரிவுகளுக்கு நேரடி சேர்க்கை செய்வதற்கான கடைசி நாள் 15.09.2021 வரை நடைபெற உள்ளது என**

**திரு.டாக்டர். ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப. அவர்கள் தகவல்!!!**

ஐ.டி.ஐ–ல் உள்ள காலியிடங்களுக்கு **முதலில் வருவோருக்கு முன்னுரிமை** என்ற அடிப்படையில் நடைபெற்று வரும் பயிற்சியாளர்களுக்கான நேரடி சேர்க்கை **15.09.2021** வரை நடைபெற உள்ளது.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோவை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஆனைகட்டி, மற்றும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்(மகளிர்), கோவை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் ஓராண்டு மற்றும் ஈராண்டு தொழிற்பிரிவுகளில் சில இனங்களில் உள்ள காலியிடங்களை பூர்த்தி செய்திட 8–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு **முதலில் வருவோருக்கு முன்னுரிமை** என்ற அடிப்படையில் நேரடி சேர்க்கை நடைபெற்று வருகிறது. மேற்படி நேரடி சேர்க்கைக்கான கடைசி தேதி தற்போது **15.09.2021** வரை நடைபெற உள்ளது.

மேட்டுப்பாளையம் சாலையில் அமைந்துள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோவையில் ஆகஸ்ட் 2021 கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்களின் நேரடி சேர்க்கை 24.08.2021 முதல் பதிவு செய்யப்பட்டு சேர்க்கை நடைபெற்று வருகிறது. நேரடி சேர்க்கைக்கான கடைசி நாள் **15.09.2021** ஆகும். இதில் கோவை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள Electrician, MMV, Fitter, Turner, Machinist, Machinist Grinder, Ref & A/c, ICTSM, Instrument Mechanic, MMTM, Technician Mechatronics, Electronic Mechanic, Wireman ஆகிய ஈராண்டு பிரிவுகளும் COPA, Food Production, Interior Design & Decoration, PPO, Sheet Metal Worker, Welder ஆகிய ஓராண்டு தொழிற்பிரிவுகளும், Remotely Piloted Aircraft (Drone Pilot) என்ற ஆறுமாத குறுகிய கால பயிற்சியும் ஆண்–பெண் இருபாலருக்கும் பயிற்றுவிக்கப்படுகிறது.

இதற்கான பயிற்சிக்கட்டணம் முற்றிலும் இலவசம். அனைத்து பயிற்சியாளர்களுக்கும் இலவச மடிக்கணனி, மிதிவண்டி, பேருந்து அட்டை, சீருடைகள், காலணிகள் மற்றும் வரைபடக் கருவிகள், NIMI புத்தகம் அரசால் இலவசமாக வழங்கப்படுகிறது. பிரதி மாதம் ரூ.**750/–** வீதம் வருகையின் அடிப்படையில் கல்வி உதவித்தொகை அரசால் வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு, பழங்குடியினர் பயிற்சியாளர்களுக்கு உணவு வசதியுடன் தங்கும் விடுதி வசதி (தகுதியின் அடிப்படையில்) வழங்கப்படும்.

வயது வரம்பு 14 முதல் 40 வரை (மகளிருக்கு உச்ச வயதுவரம்பு இல்லை). இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும் வளாக நேர்காணல் (Campus Interview) மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற்று வழங்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டாக்டர்.ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

மிகக்குறைந்த காலியிடங்களே உள்ளதால், மாணவ, மாணவியர்கள் தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெற்று பயன் பெற கோவை, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை நேரில் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கோவை–0422–2642041, 9442624516, 8667408507, 9443171698, 8015012040

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயபுத்தூர்.**